11.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 190/2021

PROSECUTION WITNESS L.W.3/P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணி | Caste | : | |
| Father's Name | : | கருப்பண்ணன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.01.2025

முதல் விசாரணை

**1) நான் தற்போது முள்ளாம்பரப்பில் குடியிருந்து கொண்டு பிளாஸ்டிக் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வருகிறேன்.**

**2) நான் எதுவும் பார்க்கவில்லை. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியையும், புகார்தாரரையும் எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) **கடந்த 03.05.2020 அன்று துரைசாமி விநாயகர் கோவில் அருகில் இருக்கும் தண்ணீர் பைப்பிற்கு தண்ணீர் பிடிக்க சென்றபோது ஆஜர் எதிரி அந்த இடத்தில் சேர் போட்டு உட்கார்ந்து கொண்டு தண்ணீர் பிடிக்க இடையூறு செய்தாரா என்றால் தெரியாது. அதை புகார் தாரர் துரைசாமி கேட்டதற்கு என் கடைக்கு முன்னால் நான் அப்படி தான் உட்காருவேன் நீ யாருடா தாயோழி என்னை கேட்பதற்கு என**

திட்டினாரா என்றால் எனக்கு தெரியாது. மீண்டும் ஏன் தகராறு செய்கிறாய் என்று கேட்டதற்கு அப்படி தான்டா தகராறு செய்வேன் என்று கூறி ஆஜர் எதிரி கீழே கிடந்த மரக்கட்டையை எடுத்து அவருக்கு வலது கையில் விரல் இல்லாததால் இடது கையால் துரைசாமியின் மண்டையின் இடது பக்கத்தில் அடித்ததில் இரத்தக்காயம் ஏற்பட்டதா என்றால் தெரியாது. அதை பார்த்து அவரது தம்பி மற்றும் நானும் ஓடிவரவே ஆஜர் எதிரி கட்டையை போட்டுவிட்டு என்னைக்கிருந்தாலும் இந்த கட்டையால் தான் உனக்கு சாவு என மிரட்டிச் சென்றாரா என்றால் இல்லை. மேற்கூறிய சம்பவம் உண்மை எனவும், தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

௯.DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C. No. 190/2021
PROSECUTION WITNESS L.W.2/P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிருஷ்ணமூர்த்தி | Caste | : | |
| Father's Name | : | அருணாச்சலம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.01.2025

முதல் விசாரணை

1) நான் தற்போது முள்ளாம்பரப்பில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன்.

2) இவ்வழக்கின் புகார்தாரரான எனது அண்ணன் துரைசாமி கடந்த 17.07.2024 ம் தேதி இறந்துவிட்டார். கடந்த 03.05.2020 ம் தேதி, மாலை 7.30 மணிக்கு, நான் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது எனது அண்ணன் துரைசாமி விநாயகர் கோவில் அருகில் இருக்கும் தண்ணீர் பைப்பில் தண்ணீர் பிடிக்க சென்றபோது, ஆஜர் எதிரி அங்கு சேர் போட்டு உட்கார்ந்து கொண்டு இடையூறு செய்தார். அதை எனது அண்ணன் கேட்டதற்கு தகாத வார்த்தையால் பேசி, அங்கிருந்த மரக்குச்சியை எடுத்து ஆஜர் எதிரி அவரது வலது கையில் விரல் இல்லாததால் இடது கையால் எனது அண்ணனின் மண்டையில் அடித்து இரத்தக் காயம் ஏற்படுத்திவிட்டார். சத்தம் கேட்டு அங்கு சென்றபோது, குச்சியை அங்கேயே போட்டுவிட்டு என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என மிரட்டிவிட்டு சென்றார். என்னிடம்

காண்பிக்கப்படும் மரக்குச்சியால் தான் எதிரி என் அண்ணனை தாக்கினார். (80 **செமீ நீளமுள்ள மரக்குச்சி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) எனது அண்ணனுக்கு இரத்தக் காயம் ஏற்பட்டதால் நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு, அச்சமயம் கொரோனா சமயம் என்பதால் நாங்கள் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அதன்பின் இது சம்மந்தமாக தாலுக்கா காவல்நிலையத்தில் எனது அண்ணன் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

1) எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே எங்கள் வீட்டின் அருகே எல்பிபி வாய்க்கால் தடத்தை வழித்தடமாக பயன்படுத்துவதில் பிரச்சனை இருந்து வந்தது என்றால் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும், இது சம்மந்தமாக எதிரி என் மீது ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்தில் புகார் அளித்து அங்கு பைசல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் மற்றும் குடும்ப உறவினர்களுடன் நல்ல முறையில் இல்லாமல் அவர்களுடன் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் எனது அண்ணன் அவருக்கும், எனக்கும் நீண்ட நாட்களாக பேச்சு வார்த்தை இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு.

2) எனக்கும், எனது அம்மா, அண்ணனுக்கும் சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு நடந்தது என்றால் அது எனது தனிப்பட்ட விஷயம். எங்களுக்கும், எதிரிக்கும் பாத்தியப்பட்ட பொது கிணற்றில் மோட்டார் சரிசெய்ததற்கு நீண்ட நாட்களாக பணம் கொடுக்காமல் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை எவ்வளவு நேரம் நடந்தது என்றால் கால் மணி நேரம் நடந்தது. நான் சண்டை நடந்த சத்தம் கேட்டு தான் வெளியே வந்து பார்த்தேனா என்றால் சரியல்ல. நான் வாசலில் தான் நின்று கொண்டிருந்தேன். நான் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல நான் சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன்.

3) புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள படியோ, நான் சொன்ன படியோ எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கும் தண்ணீர் பைப்பிற்கும் இடையே 25 முதல் 30 அடி தூரம் இருக்கும். 25 முதல் 30 அடி தூரத்தை நான் எவ்வளவு நேரத்தில் கடப்பேன் என்றால் 2 நிமிடத்தில் கடப்பேன். நான் பிரச்சனை நடக்கும் போதே தடுத்துவிட்டேன் என்றால் நான் செல்வதற்குள் எதிரி என் அண்ணனை அடித்து விட்டார், அதன் பின் தான் நான் தடுத்தேன். என் அண்ணனை அடிப்பதற்கு முன்பு அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4) நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எங்களுக்கும் எதிரிக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக எனது அண்ணனுக்கு ஆதரவாகவும், எதிரிக்கு எதிராகவும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு ஏற்பட்ட காயங்கள் எங்கள் தரப்பில் ஏற்பட்டிருக்க வேண்டும், அல்லது பொய்யாக இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் தனியார் மருத்துவமனைக்கு சென்றதாக கூறாமல் தற்சமயம் முதல் விசாரணையில் தான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவனை சென்று தான் வந்தேன். வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) எதிரி என் அண்ணனை தாக்கி காயம் ஏற்பட்டிருந்தால் உடனடியாக நாங்கள் சிகிச்சை அளித்திருப்போம் என்றாலும், அந்த காயத்தை நாங்களே ஏற்படுத்தியிருந்ததால் தான் அவ்வாறு சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் எதிரி விடுவிக்க வேண்டும் என்றால் சரியல்ல. சான்று பொருள் 1 எங்களால் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.